**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம், 1972 இலக்கம் 11 கொண்ட அரச விவசாய கூட்டுத்தான சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்று பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்தொன்றின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மற்றும் நட்டக் கழிவுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மற்றும் நட்ட கழிவுகள் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்டவைகள் கடந்த ஆண்டை விட வேறு படுமாயின் இலங்கை கணக்கீட்டு நியமம் 08ன் கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் வேறுபாடுகள் மற்றும் பிழைகள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட | இந்த சொத்துக்களின் எஞ்சிய மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் குழுவிற்கான மதிப்பீட்டு உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பெறுகைகள் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த செயல்முறை நடந்தவுடன், தொடர்புடைய மதிப்பீட்டு | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். இருப்பினும் ரூபா 348.79 மில்லியன் ஆன முழுமையாக பெறுமானத்தேய்வுக்கு உட்படுத்தப்பட்ட தற்போது பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மதிப்புகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 பந்தி பிரகாரம் மற்றும் சபையின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கை 3.2.3 இல் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்விடலை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதும், 2020 ஆண்டினுள் தோட்டங்களினால் மற்றும் பிரதான அலுவலத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,609,889 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதியை கவனத்திற் கொள்ளாது மீளாய்வாண்டிற்கு பெறுமானத் தேய்விடப்பட்டு இருந்தது. | பிரதான அலுவகம் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கொள்வனவு செய்த திகதியிளிருந்து சொத்துக்கள் பெறுமானத் தேய்விடலை 2022 ஆண்டு சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2022 ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து சரியாக பெறுமானத் தேய்விடலை செய்யப்பட்டுள்ளது. தோட்டப் பிரிவும் 2021 முதல் சரியான கொள்வனவு தேதியிலிருந்து தேய்மானம் மேற்கொள்ளப்படுகிறது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மற்றும் சபையின் கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பந்தி பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன் கடப்பாடுகளை கணக்கிடும் போது ஆயுள்கணக்கிடல் முறை அதாவது நிறுவனத்தின் நிகழ்கால சேவைகள் கிரயம், ஊழியர்களின் வயது அளவுகள், ஊழியர்களின் ஆயுள் எதிர்பார்ப்பு, சேவை விற்பனைக்கு ஏற்பட்ட தாக்கம், ஓய்வூதிய வயது, கழிவு விகிதம், சம்பளம் மற்றும் வளர்ச்சி சதவீதம் போன்ற எடுகோள்களை பயன்படுத்தி கணக்கிட வேண்டிய போதும், சபையினால் தனது நலன்களை கணக்கிடும் போது ஊழியர் ஒருவர் ஆண்டு இறுதியில் பெறும் ஆரம்ப சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டு சேவை நலன் கணக்கிடப்பட்டிருந்தது. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் பணிக்கொடையை கணக்கீட்டிற்கு முன்பே 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தொழில் திணைக்களத்தினால் பணிக்கொடை நிலுவைத் தொகை தொடர்பான விஷயங்களை இந்தச் சட்டத்தின்படி கையாள்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 2024.06.25 அன்று நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில், பணிக்கொடைச் சட்டத்தின்படி செயல்படுவது பொருத்தமானது என்று பரிந்துரைத்தது. மேலும், இது 2020 நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சேவை நலன் கடப்பாடுகள் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 பந்தி பிரகாரம் உயிரியல் ரீதியான சொத்துக்களை ஆரம்ப இனங்காணலின் போது மற்றும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் விற்பனைக்கான செலவுகளை குறைத்த பின்னர் நியாயமான பெறுமதிக்கு அளக்க வேண்டிய போதிலும் சபையினால் ரூபா 33,620,787 ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துப் பெறுமதி அவ்வாறே வருடாந்தம் மதிப்பிடாது நிலையான பெறுமானமாக முன்கொண்டு வரப்படுகின்றது. அப் பெறுமானத்தை மீள்மதிப்பீடு செய்து கொள்வதற்கும் வருடாந்தம் நாளாதுவரையாக்கப்பட்ட மரக் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.<br>மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட உயிரியல் ரீதியான சொத்துக்களின் விற்பனை வருமானம் ரூபா ரூபா 47,606,468 ஆன போதும் இந்த மரங்களிற்கு உரிய கிரயம் சொத்துக்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 நிதிநிலை அறிக்கைகள் விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததால், இந்த உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டை 2020 ஆம் ஆண்டு கணக்குகளுடன் சரிசெய்ய போதுமான நேரம் இல்லை, எனவே இதை 2020 கணக்குகளில் சேர்க்க முடியவில்லை. எனவே, இந்த சரிசெய்தல்கள் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை நியாயமான பெறுமதிக்கு இனங்கானுவதற்கு மற்றும் சொத்துக்களுக்கான விற்பனைக்கான கிரயம் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 54 (ஈ) பந்தி பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பில் பெறுமானத் தேய்வு முறை மற்றும் பெறுமானத் தேய்வு விகிதத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட வேண்டிய போதும், ரூபா 1,835,941 ஆன ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்கு உரியதாக பெறுமானத்தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | தேய்மான முறை மற்றும் தேய்மான விகிதம் வெளியிடப்பட்ட ரூபா 6,489,530 வினுல் ரூபா 1,928,369 ஆன கொகோவா 2020 ஆம் ஆண்டில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளதுடன், பட்டை, மிளகு மற்றும் கடுகு பயிர்செய்கை 2022 ஆம் ஆண்டு முதல் தேய்மானத் தேய்வு செய்யப்படும்.<br><br>மேலும், சபையின் தோட்டங்களினுள் உள்ள பிற உயிரியல் சொத்துக்கள். ரூபா 1,835,941ஆன பயிர்ச்செய்கையினுள் ரூபா 1,182,161 ஆன கிராம்பு பயிர்செய்கை மற்றும் கோப்பி பயிர்செய்கை ரூபா 653,780 ஆகவும், அந்தப் பயிர்ச்செய்கைகளின் | உயிரியல் சொத்துக்களுக்கான தேய்மான முறை மற்றும் தேய்மான விகிதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டும், மேலும் அதற்கேற்ப தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தேய்மான விகிதங்கள் மற்றும் முதிர்வு காலம் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்கியல் பதிவுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | | |
|---|---|---|
| சபையினால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 123,306.37 ஹெக்ரேயர் உள்ளடங்களாக சபையின் மொத்த காணிகளின் அளவு 142,593.03 ஹெக்ரேயர் காணப்பட்ட போதிலும், அந்த காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் மற்றும் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கிடப்பட்டிருப்பதில்லை என்பதுடன், 2,872.45 ஹெக்ரேயர் சாணிகள் சபையினால் சரியாக அடையாளம் காணப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணிகளின் சாதாரண மதிப்பீடு கணக்குகளினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அந்த காணிகளின் உறுதித் தன்மை மற்றும் மொத்த பெறுமதி சார்பாக கணக்காய் விற்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது இருந்தது. | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான தோட்டங்கள் அளவிடுதல் நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் நில அளவைகள் திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள துடன் தற்போது அந்த தோட்ட அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக நில அளவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இருப்பினும், அந்தத் தோட்டங்களுக்குரிய காணிகளின் தளகோளங்கள் இன்னும் மக்கள் தோட்ட சபைக்கு கிடைக்கவில்லை என்பருடன் அந்த காணிகளின் தளகோளங்கள் கிடைக்கப்பெற்றதுடன் மதிப்பு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக காணி பிரிவினால் எங்களுக்கு வாய் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அளவையியல் நிறுவனத்திடம் காணப்படுகின்ற காணிகள் அளவு மதிப்பிடப்பட்டு நிதிக்கூகூற்றுக்களில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சபைக்கு உரித்தான மொத்த காணிகளின் சாதாரண பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூகூற்றுக்களில சரியாக கணக்கிடுதல் மற்றும் அடையாளம் காணப்படாத காணிகளை அடையாளம் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கரத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடப்பு ஆண்டுக்கு முன்னே வருடங்களுக்குரிய மேற்கொள்ளப்பட்ட சீராக்களின் காரணமாக இடம் பெற்ற பாதிப்பாக ரூபா 27,155,018 பெறுமதியான தொகை காசுப் பாய்ச்சலில் சீராக்கப்பட்டிருந்தது. | சென்ற வருடங்களின் இலாபத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய பிழைகள் சரி செய்யப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், ரூபா 27,155,018 ஆன மீதி முன்னே | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும் இந்த பெறுமதியினால் இந்த வருடத்தின் இலாபத்திற்கு எதுவித பாதிப்புகள் இடம் பெறவில்லை என்பதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கிடைக்கப் பெற்ற தேரிய காசுப் பாய்ச்சலின் பாதிப்பான மீதி மேலும் அந்த பெறுமதியினால் அதிகரிக்கப்பட்டு உள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | வருடங்களின் சீராக்கங்கள் கணக்குகளின், தகவல்களின் பெற்றுக்கொள்ள முடியும். இந்த கணக்குக்குகளுக் குரிய நாட்குறிப்பு வவுச்சர் 2020 நாட்குறிப்பு வவுச்சர் கோப்புக்குள் உள்ளடக்கப்பட்டது. | |
| (ஆ) | 2007 ஆம் வருடத்தில் நாகச்தெண்ண தோட்டம் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் கம்பெனி ஒன்றுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அந்த நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,176,683 பெறுமதி 12 வருடங்களை விட அதிகமான காலத்திலிருந்து வியாபார மற்றும் வேறு கிடைக்கப்பெற வேண்டியதாக நிதி கூற்றுக்களின் முன் கொண்டு வரப்பட்டு காணப்படுகிற போதிலும், காணிப் பிரிவினால் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2009 ஆம் வருடத்தில் சபையினால் அந்த தோட்டம் மீண்டும் பொறுப்பு ஏற்கப்பட்டதன் காரணமாக 2024 ஜூன் 30ஆம் தேதியில் அந்த கம்பெனிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 21,986,330 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களினுள் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாகச்தெண்ண தோட்டம் Queenrich Agro Pvt Ltd; நிறுவனத்திற்கு 2007ஆம் வருடத்தில் நீண்ட கால குத்தபையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. காணிப் பிரிவினால் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் Queenrich Agro கம்பெனி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் இணக்கத்தின் அடிப்படையில் 2009.12.22 ஆம் திகதியில் எங்களினால் நாகச்தெண்ண தோட்டம் மீண்டும் பொறுப்பு ஏற்கப்பட்டதன் காரணமாக Queenrich Agro கம்பெனிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 24,551,714 ஆகும். இந்த இனக்கத்தின் காரணமாக சபையினால் ரூபா 1,000,000 தொகை ஒன்று Queenrich Agro நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக நாகச்தெண்ண தோட்டத்தின் தேயிலை கொழுந்து முகவர்களுக்கு விற்பனையினால் கிடைக்கப்பெற்ற தொகை அவர்களினால் பெறப்பட்டதுடன் அந்த தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 21,986,330 | கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டு சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகும். Queenrich Agro கம்பெனி 2024.06.24 திகதிய கடிதத்தினால் அவர்களுக்கு கிடைக்கக்பெற வேண்டிய தொகை ரூபா 21,986,330 ஆக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2024.09.30 திகதி Queenrich Agro கம்பெனியின் கணக்கு சீர் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் செயற்படுத்தி இருந்த ‘‘தோட்ட அபிவிருத்தி கருத்திட்டம்’’ 2010 ஆண்டில் முடிவடைந்திருந்த போதும் அந்த கருத்திட்டத்திற்கு உரியதாக கூரை தகரங்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் செலவிடப்பட்ட ரூபா 4,136,733 தொகை சபையின் நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளாக 10 ஆண்டுகளிற்கு அதிக காலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அத்தொகையை அறவிடுவது நிச்சயமற்றதாக இருந்த போதும் அதற்காக எவ்வித ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | இந்த கருத்திட்டம் 2010 ஆண்டளவில் நிறைவடைந்துள்ள போதும் பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அனுசரனையுடன் இக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு அத் தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் இற்குரிய நிறுவனமும் தற்போது செயற்படாததால் இது தொடர்பாக மேலும் விடயங்களை தேடிப்பார்த்தலின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு நிதி மீள்நிரப்பள் மேற்கொள்வதற்காக உள்ள நிறுவனம் தற்போது செயல்படுத்தப்படாததன் காரணமாக அதற்காக நிதிக் கூட்டுக்களில் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை கூற்றில் வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய மீதியினுள் 17 தோட்டங்களுக்குரிய காணப்படுகின்ற ரூபா 128,122,068 ஆண மீதிகளில் 10 தோட்டங்களுக்குரிய ரூபா 115,546,879 ஆன மீதிகள் தொடர்பான காலப் பகுப்பாய்வொன்று மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் 10 வருடங்களை விட பழைய ரூபா 7,287,138 ஆன மீதி ஒன்று அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு | 2020 ஆம் வருடத்தின் தோட்டங்களின் கடன் மீதிகளுக்குரிய கால பகுப்பாய்வு உரிய மாதிரியின் பிரகாரம் காணப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதுடன் 2021 ஆம் வருடத்திலே உரிய மாதிரியின் பிரகாரம் அனைத்து தோட்டங்களினதும் கடன் கொடுத்தோர் கடன் பட்டோர் கால பகுப்பாய்வு குறிப்புகள் தயாரித்து முடிவடையப்பட்டுள்ளது | தோட்டங்களின் கடன் மீதிகளுக்குரிய மீதிகளை உறுதிப்படுத்தி துரிதமாக அறவிட்டுக் கொள்வதற்கும் நிச்சயமற்ற தன்மையில் காணப்படுகின்ற மீதிகள் தொடர்பாக நிதி கூற்றுக்களில் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை என்பதுடன் அறவிட்டுக்கொள்ளுதல் நிச்சயமற்ற தன்மையில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | கடன் கொடுத்தோர் உப பதிவேட்டின் பிரகாரம் 9 தோட்டங்களின் 05 வருடங்களை விஞ்சிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 13,028,558 மற்றும் 4 தோட்டங்களின் 10 வருடங்களை விஞ்சிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 6,512,056 காணப்பட்ட போதிலும் இந்த கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு (அல்லது உரித்தடட் கடன் கொடுத்தோரை அடையாளப்படுத்தி வருமானத்துக்கு மாற்றிக் கொள்வதற்கு) சபையினால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் தொடர்பான தகவல்களை பெற்றுத் தருமாறு தோட்ட பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த மீதியை செலுத்துதல் வல்லமை தொடர்பான தகவல்களை தேடிப் பார்க்குமாறும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. தோட்டங்களின் மூலம் தகவல்கள் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தோட்டங்களினுள் காணப்படுகின்ற கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியின் இருப்பு மீதியினுள் ரூபா 3,418,944 ஆன காலம் கடந்த தேயிலை இருப்போன்று இருப்பொன்று காணப்பட்டதுடன் அதனுள் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டின் காலம் கடந்த தேயிலை இருப்பின் பெறுமதி ரூபா 1,049,491 ஆகும். இந்த காலம் கடந்த இருப்புக்கான தேவையான சீராக்கங்களை கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அது தொடர்பாக இருப்பு பகுப்பாய்வு அறிக்கையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 2,369,453 ஆன 2019 ஆம் வருடத்தின் காலம் கடந்த தேயிலை இருப்பின் பெறுமதி அல்ல என்பதுடன் இது முன்னைய வருடங்களில் இருந்து முன்கொண்டு வரப்பட்டு வருகின்ற மீதியாகும். பாவனையாளர் பிரிவினால் இந்த காலம் கடந்த மற்றும் காலம் கடப்பதற்கு அண்மித்துள்ள தேயிலை இருப்பை மீண்டும் பாவனைக்குடுத்த முடியுமான நிலை இருப்பாக மாற்றும் Refire செயற்பாட்டுக்கு உட்படுத்துவதற்காக தோட்டத்திற்கு மீண்டும் அனுப்பப்படுவதுடன் அந்த செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் சபையின் பிரதான அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டு விற்பனைக்கு விடப்படுவதாக பாவனையை பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த | மீண்டும் பாவனைக்கு உட்படுத்த முடியுமான நிலைக்கு மாற்றப்பட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இருப்பு கணக்குகளினுள் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னைய வருடங்களிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட மற்றும் மீதிகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இருப்புக்குரிய விலை இந்த கணக்குக்கு சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என்பதுடன் அது 2024 ஆம் வருடத்திலேயே சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | |

**1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.**

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி. | 119,318,496 | 97,709,342 | 21,609,154 | நாங்கள் அனுப்பிய அறிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்தில் எங்கள் நிறுவனத்தின் பெயரில் வைத்திருக்கும் பேரேட்டு கணக்குகளின் நகல்கள் மட்டுமே எங்களிடம் உள்ளதுடன், மேலும் போதுமான தகவல்கள் இல்லாததால், அந்தக் கணக்குகளைச் சரிபார்ப்பது கடினமாக உள்ளது. | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி தொடர்பாக சரியான தரவுகளைச் சேகரித்து மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மர விற்பனை வருவாய் | 47,606,468 | 47,158,339 | 448,129 | நிதிக்கூற்றுக்களுக்கும் அட்டவணைக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 448,128 ஆன மீதி வளப் பிரிவுடன் கலந்துரையாடப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டு, அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மர விற்பனை வருவாய் குறித்த ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | வீத வரி செலவு | 6,542,340 | 5,908,552 | 633,788 | 2020 இலாப நட்டக் கணக்கில் நிர்வாகச் செலவுகளில் விகித வரியாக இருக்க வேண்டிய மீதி ரூபா 5,908,552 ஆக இருந்த நிலையில், அது ரூபா 6,542,340 வினால் இலாப நட்டக் கணக்கில் ரூபா 633,788 ஆக குறைவடைந்திருந்தது. | விகித வரி செலவு குறித்த ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | வருடாந்த பெறுமானத் தேய்மானச் செலவு | 33,487,549 | 30,666,760 | 2,820,789 | பேரேட்டுக்கும் சொத்துப் பதிவேட்டிற்கும் இடையிலான முரண்பாட்டிற்கான காரணம், பேரேட்டு, தோட்டங்களின் மாதாந்த பெறுமானத் தேய்மானக் கணக்கீட்டின் போது செய்யப்பட்ட குறைந்த மற்றும் அதிக கணக்கீடுகளைச் சரிசெய்வதாகும். இருப்பினும், சொத்துப் பதிவேட்டில் திருத்தம் பதிவு செய்யப்படாததால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. | நிதி கூற்றுக்கள் மற்றும் சொத்து பதிவுகள் துல்லியமாக சரிபார்த்து, சரியான தேய்மானம் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ஆதன பொறிகள் உபகரணங்களில் 05 வகையான கிரயம் | 349,237,039 | 343,648,415 | 5,588,624 | Group II – ரூபா 342,258 மற்றும் Group I - ரூபா 5,246,366 ஆகும். அதன் பிரகாரம், Group II இன் WIP க்கு உள்ளடக்கப்படாமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. Group I உள்ள வேறுபாட்டை | சொத்துக்கள் குறித்து ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | நிலையான சொத்து பதிவேட்டில் அடையாளம் காணப்படாத ஆதன பொறிகள் உபகரணங்களின் மீதி | 12,284,534 | - | 12,284,534 | முகாமைத்துவத்தினால் இந்த மீதி தொடர்பான விபரமான தெளிவுபடுத்தல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதி அடையாளப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | பிரதான அலுவலகத்தின் வியாபார கடன் கொடுத்தோர் மீதி | 142,786,753 | 142,966,115 | 179,362 | கடன் கொடுத்தோர் உபபதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நீண்டகால கடன் கொடுத்தோர்களின் மீதிகளில் இருந்து பெரும்பான்மையானவை கடன் கொடுத்தோர் மீதி பகுதியளவில் நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதி நிலைமையின் பிரகாரம் செலுத்தப்பட்டு வருகின்றது என்பதாக. | கடன் கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்தி சரியான பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.5 தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கரத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொடர்ச்சியான நட்டமடைதலின் மீது 2020 திசெம்பர் 31 திகதிக்கு சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் செயல்பாட்டு மூலதனம் முறையே ரூபா 924.8 மில்லியனாக மற்றும் ரூபா 2,004.4 மில்லியனான மறை பெறுமானத்தை கொண்டிருந்ததுடன், அத் திகதியில் புறக்கணிக்கப்பட்ட நியதிச்சட்ட கொடுப்பனவுகள் ரூபா 1,793.5 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 161.5 மில்லியனான வங்கிக் கடண் மீதியொன்றும் சீர் செய்வதற்கு | சபையிக்கு சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் உரியவாறு மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அந்த சொத்துக்களின் பெறுமதிகள் புத்தகங்களுக்கு எடுக்காததன் காரணமாக மறை பெறுமானத்தை பெறுவதற்கு அமைந்திருந்ததுடன் ஒரு சொத்து மறு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டால், மதிப்பு நேர்மறையாக இருக்கும். மேலும், நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டு மூலதனப் பற்றாக்குறை காரணமாக, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்ட | தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக நிச்சயமற்ற தன்மை மதிப்பிடப்பட்டு அதைத் தணிக்க செயல்படக்கூடிய திட்டங்கள் உருவாக்கல் மற்றும் இது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளியிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இருந்தது. இதன் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையினால் சபையை மறுசீரமைக்க வேண்டுமென முடிவு செய்துள்ளதாக வெளிப்படுத்தியிருந்த போதும் 2024 மார்ச் 31 வரை அத்தகைய மறுசீரமைப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளை செலுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2020 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 2.4 இன் காட்டப்பட்டுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள், ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் காரணமாக மேற்கொள்ளப்படாததால், இந்தக் குறிப்பு 2022 நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்படும். |

### 1.5.6 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் பிரதான அலுவலம் | 1,503,744,550 | விரிவான அட்டவணைகள், காணிகளின் தளகோளங்கள் திட்டங்கள் மற்றும் பரிமாற்றத்திறகான வர்த்தமானி போன்றவைகள். | ரூபா 1,503,744,550 ஆன உள்ளடங்களாக ரூபா 1,489,375,963 தொடர்பான விபரமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பிரதான அலுவலகத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமம் மற்றும் தன்மை தொடர்பாக போதுமான சாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் மீதி ஓனுகல்ஓய தோட்டத்தின் | 6,013,927 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பௌதீக சொத்துக்கள் ஒப்பாய்வு அறிக்கை | ஓனுகல்ஓய தோட்ட மகாவலி செயர்திட்டதுக்காக மகாவெலி அதிகார சபையினால் உரித்தாக்கப்பட்ட காணி ஒன்றாக காணப்படுவதுடன் அது மகாவலி செயத்திட்டம் காரணமாக மூழ்கடிக்கப்பட்டதன் காரணமாக அதற்கு உரிய நிலையான சொத்துக்களும் பௌதீக இருப்பு இருக்கவில்லை. காணிகள் பிரிவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட கடிதத்தின் பிரதியின் பிரகாரம் ஓனுகல்ஓய தோட்ட மகாவெலி செயற்திட்டதுக்கு பெறப்பட்டதாக தகவல்கள் காண்பிக்கப்படுவதுடன் | சொத்துக்களின் உரிமம் மற்றும் தன்மையை உறுதிப்படுத்தி அதன் பிரகாரம் எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மேலும் விடயங்களை தேடி பார்ப்பதற்காக சொத்துக்களின் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) | ஏனைய சொத்துக்கள் | 8,696,304 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, உப பதிவேடு, சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை | இந்த ரூபா 8,696,304 பெறுமானம் தொடர்பாக எவ்வித தகவல்களும் தற்போது நிறுவனத்திடம் இல்லாதது காணப்படும். | ஏனைய சொத்துகளுக்குரிய மீதிகளை இனங்காண தேவையான செயற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஈ) | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் முதிர்ச்சியடைந்த பயிர்கள். | 17,925,652 | மரங்கள் கணக்கெடுப்பு அறிக்கை, பெறுமதி மதிப்பீட்டு செய்வதற்குரிய அறிக்கை | இந்த உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் ரூபா 17,925,652 பெறுமானம் 1996 வருடத்திற்கு முன்னாலான காலம் தொடர் நீண்ட காலமாக பாணப்பட்டு வரும் மீதியானதால் இது தொடர்பாக தகவல்களும் தற்போது நிறுவனத்திடம் இல்லாதது காணப்படும். | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்ட மீதிகள் மற்றும் இணங்கான நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |
| (உ) | நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 34,244,271 | வேலை அங்கீகரிப்பதற்கு உரிய பணிப்பாளர் சபை பத்திரம், கொடுப்பனவு வவுசர்கள், வேலை முடிவுறுத்தப்பட்ட வேலைகளின் செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை. | இது தொடர்பான அனைத்து தகவல்களும் தோட்டங்களில் காணப்படுவதுடன் விபரமான தகவல்களை சமர்ப்பிப்பதற்காக போதுமான அளவு காலம் ஒன்று தேவைப்படுவதாக. | நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | மீண்டும் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 68,859,348 | விரிவான பதிவேடுகள், கால பகுப்பாய்வு | மீண்டும் செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் தொடர்பாக உப பதிவேடு நிறுவனத்திடம் தற்போது காணப்படாமையினால் 2024 ஆம் வருடத்திலிருந்து இந்த உப பதிவேட்டினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உரிய பணிகள் நிறைவடைந்த பின்னர் முதலீட்டாளர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த பணம் | வைப்பு மீதிகளை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு முடியாது இருப்பின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மீண்டும் வைப்பாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் | 25,492,128 | விற்பனை தொடர்பான விபரங்கள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல். | ஹெட்டன் பிளான்டேஷன் நிறுவனத்திடம் மற்றும் இன்சைட் ∴பேக்டரிஸ் தனியார் கம்பெனியிடம் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய தேயிலை கொழுந்து விற்பனை வருமானத்திற்காக உரிய கால பகுப்பாயவொன்று மாத்திரம் அரச கணக்காய்வினால் கோரப்பட்ட போது, கணக்கு பிரிவினால் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இந்த மீதிகள் 2021.01.08 ஆம் தேதி செலுத்தப்பட்டுள்ளது. | தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் தொடர்பான விபரங்கள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல் மூலம் கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்களை அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | இறுதி இருப்பு- செடி நாற்றுக்கள் | 11,010,075 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை விரிவான உப பதிவேடுகள் மற்றும் நாற்றுக்கள் தொடர்பான அறிக்கை | நாற்றுக்கள் தொடர்பான அறிக்கையினை தோட்டங்களில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் இதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் போதுமானதாக இல்லாததனால் எதிர்காலத்தில் இந்த அறிக்கையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இறுதி இருப்பினுள் உள்ளடக்கப் பட்டுள்ள இந்த செடி நாற்றுக்களின் மீதிகள் தொடர்பான தேவையான அறிக்கை தோட்டங்களில் இருந்து பெற்றுக் கொண்டு மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள் - சீராக்க மீதிகள் | 30,563,313 | மீதி உறுதிப்பாட்டு கடிதங்கள் விரிவான அட்டவணைகள். | குறிப்பிட்ட காலத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளை உரிய கணக்குகளில் இருந்து நீக்கி பதிவழிப்பதற்காக இந்த கணக்கிற்கு மாற்றப் பட்டுள்ள போதிலும் இந்த மீதிக்காண போதுமான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. | கடன் பட்டோர் கால பகுப்பாய்வொன்று மற்றும் விபரமான உப பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு தேவையான அறவீடுகள் மேற்கொள்வதற்கு மற்றும் அறவிட முடியாத மீதிகளுக்காக நிதி கூற்றுக்களினுள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | பல்வேறு கடன் பட்டோர் பிரதான அலுவலகம் | 4,114,051 | விரிவான உப பதிவேடுகள். | 2020ஆம் வருடத்தின் நிறைவடைந்த நிதி கூற்றுக்களினுள் விபரமான குறிப்புகளின் கீழ் கட்டப்பட்டுள்ளது. அதில் ரூபா 1,152,879 - Jaffna Area Control கணக்கு தோட்ட கணக்குகளில் காணப்படுகின்ற Jaffna Area Control இணைக்கப்பட்ட மீதிகள் எஞ்சி இல்லாதிருந்ததுடன் ரூபா 89,752,740 - Jana Tea Control கணக்கான்துடன் இந்த மக்கள் தேயிலை பிரிவின் பிரதான அலுவலக கணக்கு மற்றும் கணக்கு இணைக்கப்பட்டது. இந்த கணக்கில் உள்ள மீதி ரூபா 9,779 கணக்குகளின் கோளாறு ஒன்றாக காணப்பட்டதுடன் இது உறுதிப்படுத்தப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் பட்டோர் மீதியை அடையாளப்படுத்தி அவற்றை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக விபரமான உப பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அறவிட்டுக் கொள்வதற்கு முடியாத கடன் மீதிகள் தொடர்பாக நிதி கூற்றுக்களினுள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | மொந்த கிறிஸ்டோ தோட்டங்கள் குத்தகை வழங்கப்பட்ட தன் காரணமாக கிடைக்கப் பெற வேண்டிய மீதி (19 வருடங்களுக்கு அதிகமான) | 40,503,226 | மீதி உறுதிப்பாடு | மொந்த கிறிஸ்டோ தோட்டம் தனியார் பிரிவிற்கு குத்தகை வழங்கப்பட்டபோது அந்த தோட்டத்தில் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலான கட்டுப்பாட்டு கணக்கு இது ஆவதுடன் இந்த கணக்கினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மொந்த கிறிஸ்டோ தோட்டம் குத்தகைக்கு வழங்கப்பட்டதனால் கிடைக்கப் பெற வேண்டிய மீதியை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு மற்றும் ஒப்பீடுகளை மேற்கொண்டு மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.7 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை ரூபா | பொங்கலாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப் பெறவேண்டியவை மற்றும் செலுத்தப்பட வேண்டியவற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள தொங்கள் கணக்கு மீதி | 6,206,317 | 24 வருடங்கள் அளவிலான காலம் | ரூபா 4,342,561 ஆன இந்த தோட்டங்களுக்குரிய மீதி மற்றும் ரூபா 1,863,756 ஆன பிரதான அலுவலகத்தின் தொங்கல் கணக்கு மீதி 1996 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக இருப்பதுடன் இது தொடர்பாக தகவல்கள் தேடி பார்ப்பதற்கு முடியாதுள்ளது. | தொங்கல் கணக்கு மீதியை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு மற்றும் அடையாளப்படுத்த முடியாத மீதிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் தேயிலை கொழுந்து விற்பனைக்காக பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களிடமிருந்து உடன்படிக்கை பிரகாரம் 15 நாட்களை கொண்ட கடன் கால எல்லைக்குள் பணம் அறவிட வேண்டிய போதும், 2020 திசெம்பர் 31 திகதிக்கு 03 மாதம் முதல் 7 வருடங்கள் வரையான கால வீச்சளவை விஞ்சியிருந்த கடன்படுனர் மீதி ரூபா 40,270,672 ஆக இருந்தது. | தேயிலை கொழுந்து விற்பனை தொடர்பாக கிடைக்கப்பெற வேண்டிய மீதிகளினுள் தற்போது ஒரு சில கொள்வனவாளர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டுள்ளது. | கிடைக்கப் பெற வேண்டிய மீதி குறித்த தினத்தில் அறவிட்டுக் கொள்வது தொடர்பாக தேவையான துரித நடவடிக்கைகள் மற்றும் அறவிட்டுக்கொள்ளுதல் சந்தேகமாக உள்ள மீதிகள் தொடர்பாக நிதி கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார கடன் கொடுத்தோர் கால பகுப்பாய்வின் பிரகாரம் 1 வருடத்தில் இருந்து 3 வருடங்கள் வரையான மீதிகள் ரூபா 7,758,060 உம் 3 வருடங்களில் இருந்து 6 வருடங்கள் வரை ஆன மீதி ரூபா 12,821,559 உம் 06 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா | கடன் கொடுத்தோர் உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நீண்ட கால கடன் கொடுத்தோரின் மீதியினுள் பெரும்பான்மையான கடன் கொடுத்தோர் மீதி, பகுதி அளவாக நிறுவனங்களிடமிருந்து காணப்படுகின்ற நிதி நிலைமையின் பிரகாரம் செலுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது என்பதாக. | இந்த கடன் கொடுத்தோர் மீதியை அடையாளப்படுத்தி தீர்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

92,162,860 உம் சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் ii ஆம் பகுதியின் 5 (1) உப பிரிவு | ஒரு ஊழியர் ஓய்வு பெற்ற அல்லது மரணித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதும், நிதிநிலைக்கூற்றில் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் ரூபா 569,200,642 ஆன பணிக்கொடையை செலுத்தியிருக்கவில்லை. மேலும் பணிக்கொடையாக செலுத்த வேண்டிய ஏதேனும் தொகையை செலுத்துவதனை புறக்கணிக்கும் ஏதேனும் தொழில் தருனர் ஒருவர் அத்தொகைக்கு மேலதிகமாக சட்டத்தின் பிரிவின் பிரகாரம் கணக்கிடப்பட்ட, மிகை அறவீட்டை செலுத்த வேண்டியதால் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் சபையினால் 2020 ஆண்டு இறுதியில் ரூபா 171,623,502 ஆன தொகையை மிகை அறவீடாக செலுத்த வேண்டியிருந்தது. | தொடர்ச்சியாக நிறுவனத்தில் காணப்படுகின்ற செயற்பாட்டு மூலதன நிதி பற்றாக்குறையின் காரணமாக நிறுவனத்தின் ஊழியர் பணிக்கொடை தொகையை உரியவாறு செலுத்துவதற்கு முடியாது காணப்பட்டதுடன் தற்போதைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு அந்த வழக்குகளுக்குரியவாறு 2023 ஆம் வருடத்தின் அமைச்சரவை பத்திரம் இலக்கம் 23/0768/616/017 இன் பிரகாரம் கிடைக்கப் பெறுகின்ற ரூபா 30 மில்லியன் தொகையிலிருந்தும் தற்போது நிலவுகின்ற காசு பாய்ச்சலின் பிரகாரம் சேவை விட்டுச் சென்ற மற்றும் செல்கின்ற ஒழுங்கு முறையில் ஊழியர்களுக்கு முறையாக பணிக்கொடை செலுத்துதல் இடம் பெற்று வருகின்றது. | பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் பிரகாரம் உரிய காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுப்பதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | தொழில் வழங்குனரினால், ஊழியர் ஒருவரின் ஒவ்வொறு மாத்தினதும் ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகையை ஊழியரின் உழைப்பிலிருந்து கழித்து அடுத்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மற்றும் தொழில் வழங்குனரின் பங்களிப்புத் தொகையையும் அவ்வாறே செலுத்த வேண்டிய போதும் சபை அவ்வாறு 2001 ஆம் ஆண்டு முதல் சுமார் 19 வருட காலத்திற்கு செலுத்தாத ரூபா 860,521,811 ஆன தொகை செலுத்த வேண்டிய சேமலாப நிதியாகவும் தோட்ட பதவியணியினர் சேமலாப நிதியத்திற்கு (ESPS) மற்றும் இலங்கை பெருந்தோட்டதாரர்களின் சேமலாப நிதியத்திற்கு (CPPS) ரூபா 98,883,502 ஆன நிலுவை மீதியும் காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மேற்குறித்த நிதியத்திற்கு ரூபா 28,990,507 தொகையான மிகை அறவீடும் செலுத்த வேண்டியிருந்தது. | நிறுவனத்தில் காணப்பட்ட கடுமையான செயற்பாட்டு மூலதன நிதி நெருக்கடி காரணமாக 2000 ஆம் வருடத்திலிருந்து EPF/ETF தொடர்ச்சியாக கொடுப்பனவை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் நிதி அமைச்சின் ஒரு சில வருடங்களில் இந்த நிலுவை நியதி சட்ட தொகையை செலுத்துவதற்காக நிதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக, 2023 ஆம் வருடத்தில் அமைச்சரவை பத்திரம் இலக்கம் 23/0768/616/017 இன் பிரகாரம் ரூபா 30 மில்லியன் தொகை ஒன்று ஒவ்வொரு மாதமும் இந்த நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவை மீண்டும் செலுத்துவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அதனுடன் நிலுவை நியதி சட்ட கொடுப்பனவு மீண்டும் செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும் 1958 இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை | ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் பிரகாரம் சேமலாப நிதியம் தவணை கொடுப்பின் ஊடாக சிக்கனமற்ற செலவுகளைத் தவித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதிய சட்டத்தின் பிரகாரம் 2023 ஜூலை மாதத்தில் இருந்து நடப்பு நியதி சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் நிதியிலிருந்து முறையாக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு வருகின்றன. | |
| (இ) | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவு. | தொழிலாளரிற்கும் தொழில் வழங்குனரினால் அந்த தொழிலாளி தமது சேவையின் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொறு மாதத்திற்குமாக, அந்த மாதத்தினுள் அந்த தொழிலாளரின் சேவையில் ஈடுபடுத்தியதிலிருந்து அந்த ஊழியர் உழைக்கும் மொத்த வருவாயிலிருந்து மூன்று சதவீதமான பங்களிப்புத் தொகை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த தொழிலாளர் தொடர்பாக நிதியத்திற்கு செலுத்த தொழிலாளர் கீழ்படிய வேண்டிய போதும் சபையினால் 2011 ஆண்டு முதல் சுமார் 9 ஆண்டுகள் காலமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 63,838,198 தொகை செலுத்தத் தவறவிடப்பட்டு இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பொறுப்பு நிதியததிற்கு ரூபா 407,089 தொகைக் மிகை அறவீடு செலுத்த வேண்டியிருந்தது. | -மேற்படி- | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தவணையை உரியவாறு செலுத்துவதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2017 இன் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 93 ஆம் பிரிவு | ஒவ்வொரு மதிப்பீட்டு வருடமும் நிறைவடைந்த பின்னர் 08 மாதங்களுக்கு குறைவில்லாத காலத்தினுள் அந்த மதிப்பீட்டு வருடத்துக்கான வருமான அறிக்கை ஒன்று உள்நாட்டு | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 2020 ஆம் வருடம் வரை வருமான வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் இந்த | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருடத்துக்குரிய வருமானங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2020/2021 மதிப்பீட்டு வருடத்திற்கான வருமான வரி அறிக்கை வழங்கப்பட்டிருந்தது 2024.02.11 ஆம் திகதி ஆகும். | நிறுவனம் தொடர்ச்சியாக நட்டமடைந்து வருவதுடன் வருடத்திற்குரிய செலுத்த வேண்டிய வருமான வரி தொகை ஒன்று இல்லாம அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020/2021 வருமான அறிக்கை நிகழ்நிலை முறையின் இறைவரி திணைக்களத்துக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | உள்ளடக்கப்பட்ட வரி அறிக்கை உரிய முறையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2003 ஜுன் 02ஆம் திகதியின் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பிப்ரவரி 24ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திரைசேரி சுற்று நிருபம் | நிதி ஆண்டொன்று நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிறுவனத்தின் வருடாந்த கணக்குகள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021, 2022, 2023 ஆகிய வருடங்களின் நிதி அறிக்கைகள் மற்றும் வரைவுகள் வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2020ஆம் வருடத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, 2024 ஆகஸ்ட் 08ஆம் திகதி என்பதுடன் அந்த வருடத்தின் வரைவு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கை படுத்தப்படும் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட கணக்குகள் தயாரிப்பதற்காக தனியார் கம்பெனி ஒன்றுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதன் காரணமாக நிதி கூற்றுக்கள் தயாரித்தல் 02 வருடங்களை விட அதிக காலம் ஒன்றும் தாமதம் ஒன்று இடம்பெற்றிருந்த போதிலும் எங்களினால் தற்போது 2023 ஆம் வருடம் வரை வரைவு நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு மற்றும் அரச கணக்காய்வுக்கு 2024.08.08 ஆம் தேதி கையளிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்று நிறுவனத்தின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த கணக்குகள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 1/2020 கொண்ட பொது முயற்சிகள் | வருடாந்த பொருள் மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்படுகின்ற கால | 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களுக்குரிய பொருட்கள் | சுற்று நிருபம் மற்றும் நிதி பிரமாணம் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 11.1 பந்தி மூலம் உள்ளடக்கப்பட்ட 756(6) நி. பி. | வரையறையின் பிரகாரம் சபையின் பொருட்கள் மெய்மை ஆய்வு அறிக்கை எதிர் வரும் நிதி ஆண்டின் ஜூன் 15ஆம் தேதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் வருடத்திற்குரிய பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது 2024 ஆகஸ்ட் 08ஆம் திகதி ஆகும். | மெய்மையாய்வு அறிக்கை அனைத்தும் சபையிடம் காணப்படுவதுடன் இதுவரை அரச கணக்காய்வுக்கு, கணக்கு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற வருடத்திற்குரிய பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களுக்குரிய பொருட்கள் மெய்மை ஆய்வு அறிக்கை அரச கணக்காய்வுக்கு 2024 ஒக்டோபர் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் வருடத்தில் இருந்து உரிய கால பகுதிக்குரிய பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த பொருட்கள் மெய்மை ஆய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 348,392,616 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 757,593,788 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 409,201,172 ஆன ஒட்டுமொத்த நட்டத்தின் நேர் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்தின் நேர் வீழ்ச்சிக்கு சபையின் பிரதான வருமானங்கள் ரூபா 242,927,543 இனால் அதிகறிப்பும் தேயிலை மற்றும் இறப்பர் பயிர் செய்கைக்குரிய விற்பனை கிரயம் ஒட்டுமொத்தமாக ரூபா 130,403,650 இனால் குறைவதும் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை விற்பனையினால் கிடைத்த வருமானம் 2018 அண்டிற்கு ஒப்பாக 4.8 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன் இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம் 2018 ஆண்டிற்கு ஒப்பாக 45 சதவீதத்தரல் குறைந்திருந்தது. 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2019 அண்டில் தேயிலை மற்றும் நுகர்வோர் தேயிலை பயிர்களிற்கான கிரயம் முறையே 177 சதவீதத்தினால் மற்றும் 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் சொத்து விரைவு விகிதம் சம நிலையில் காணப்பட்டதுடன் அது 1:0.32 மற்றும் 1:0.29ஆனது.

- மீளாய்வாண்டில் மொத்த நட்ட விகிதம் 24 சதவீதம் அனதுடன், கடந்த அண்டில் அவ் விகிதம் 72 சதவீதமானது.

- மீளாய்வாண்டில் தேறிய நட்ட விகிதம் 34 சதவீதமானதுடன் கடந்த ஆண்டின் போது அவ் விகிதம் 88 சதவீதமானது.

சபையின் 2020 மற்றும் 2019 ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட விகிதங்கள் பரீட்சிப்பின் போது காணப்படும் நடைமுறை சொத்துக்களினால் அதன் நடைமுறை பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை இல்லை எனவும் மொத்த மற்றும் தேறிய நட்ட நிலை தொடர்ச்சியான வளர்ப்பினால் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை விஞ்சிய கடன் மூலதனம் காணப்படுவதால் நிறுவனத்தின் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடர்ந்தியங்கும் அபாயம் தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிதி கூற்றின் பிரகாரம் தோட்டங்களினாள் ஈட்டப்படுகின்ற வேறு வருமானங்களை தவிர பிரதான வருமான மூலங்களான தேயிலை கொழுந்து விற்பனை வருமானம், உற்பத்தியாக்கப்படுகின்ற தேயிலை விற்பனை வருமானம், தோட்டத்தினுள் தேயிலை விற்பனை வருமானம் மற்றும் இறப்பர் பால் விற்பனையினால் ஈட்டப்படுகின்ற வருடாந்த வருமானம் ரூபா 703,920,345 ஆக காணப்படுவதுடன் பேரேட்டு கணக்கின் பிரகாரம் விற்பனை கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான கிரைய முழங்கலான பொது செலவுகள், கள நடவடிக்கைகளுக்கான செலவுகள் மற்றும் உற்பத்திக்கான செலவழிக்கப்படுகின்ற செலவுகளின் கூட்டு மொத்தம் ரூபா 1,055,242,384 ஆக காணப்படுவதுடன் தியலும தோட்டத்தை தவிர 16 தோட்டங்களுக்கும் இந்த பிரதான செலவுகளை மிஞ்சி வருமானங்கள் ஈட்டப்படுவதற்கு முடியாதிருந்தது. | இணங்குகின்றேன் | ஒவ்வொரு தோட்டங்களுக்குரிய வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கு செயற்பாட்டு திட்டம் ஒன்று தயாரிப்பதற்கும் முறையான மேற்பார்வையின் கீழ் செலவுகள் கட்டுப்பாட்டுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த இலக்குகளை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக அண்மித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மற்றும் தோட்டங்களின் வருமானத்தில் நூற்றுக்கு 0.25 செலவுவைக்கப்பட்டு முறையான அங்கீகாரம் இன்றி ''தலைவர் நலன்புரி நிதியத்தின்'' பெயரில் நிதியம் ஒன்று 2020 ஆம் வருடத்தில் அமைக்கப்பட்டு மீளாவாண்டில் நிதியத்துக்கு ரூபா 2,475,672 செலவு வைக்கப்பட்டுள்ளது. | தலைவர் நலன்புரி நித்தியத்தை அமைப்பதற்கு உரிய பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு உரிய கணக்குகள் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற அனுமதி கணக்காய்வு பிரிவிற்கு கணக்கு பிரிவினால் வழங்கப்பட்டுள்ளது. | தலைவர் நலன்புரி இதயத்துக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |